செ.வெ.எண்:25 நாள்:20.04.2021

## கிருஷ்ணகிரி மாவட்டம்

## கொரோனா நோய் தொற்று தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் அறிவுரை.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், (19.04.2021) அன்று கொரோனா நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் ஊரடங்கின் போது தனியார் தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் தனியார் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய்தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் பொது ஊரடங்கு உத்தரவு, நடைமுறையில் உள்ள நிலையில் பல்வேறு தளர்வுகளுடன், சில புதிய கட்டுப்பாடுகளுடன் 30.04.2021 நள்ளிரவு 12 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, தடையின்றி செயல்பட வேண்டிய தொடர் செயல்முறை தொழிற்சாலைகள் (Continuous process industries) மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் முழு ஊரடங்கின் போதும் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கின் போது சுழற்சி முறையில் பணிக்கு வந்து செல்ல ஏதுவாக பணியாளர்களுக்கு உரிய அடையாள அட்டை அந்தந்த நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

தொழிற்சாலைகளில் கொரோனா நோய்த் தொற்று தொடர்பான தமிழ்நாடு அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளான, தொழிற்சாலை நுழைவு வாயில்களில் கை கழுவும் வசதி, கிருமி நாசினிகள் தெளித்தல், பணியாளர்கள் முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியினை பின்பற்றுதல் ஆகியவற்றினை உறுதிபடுத்த வேண்டும்.

மேலும், தொழிற்சாலை/ நிறுவனங்களின் அருகே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தடுப்பூசிகளின் இருப்புநிலை அறிந்து தங்களது பணியாளர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் வகையில் முகாம்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வு கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பி.பெரியசாமி, இணை இயக்குநர் (தொழிற்சாலைகள்) திருமதி.என்.சபீனா, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.எஸ்.பிரசன்ன பாலமுருகன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.கோவிந்தன், ஹோஸ்டியா, ஹோஸ்மியா, ஓசூர் இன்டஸ்டரீஸ் அசோசியேசன், கிரிஷ்டியா, கிரானைட் தொழில் நிறுவன பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**